முருகப்பெருமான் துணை

**மகான் கூற்றுவ நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.07.2022, சனிக்கிழமை

1. மாதர்ம ராஜனே ஞான தேசிகா
மண்ணுலகை காத்திடும் ஆறுமுக அரங்கா
சாதகமாய் உன்தர்மம் உலகம் எங்கும்
சன்மார்க்கமோடு மக்களால் ஏற்று உலகமெங்கும் பரவ
2. பரவவே ஞானஉலகம் ஆகுமெனக் கூறி
பாடிடுவேன் கூற்றுவநாயனார் யானும்
பெருமைபட சுபகிருது மிதுன திங்கள்
புகலுவேன் முப்பானீர்திகதிகாரி வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 32 நாள், 16.07.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் அருளாசி தனை உரைப்பேன்
வையகம் அரங்கனால் வளங்கள் பெற
பாரதமெங்கும் சன்மார்க்க நெறி
பரோபகார உயர்ந்த ஞான நெறியாக
4. ஆகவே வளர்ந்து சிறந்துமே
அனைவருக்கும் மாற்றம் தரும்படி நடந்துமே
செகமெங்கும் ஞானம் பூரணமாய் பரவ
சித்தர்கள் வெளிப்பாடு மனிதர்களுக்கு உள்ளே
5. உள்ளாக அற்புத சக்தியாகக் கிளம்பி
உலகமெங்கிலும் ஞானிகள் பூஜைகளாக நடந்து
வல்லமையாக ஆற்றல்கள் மிகுந்துமே
வையகமெங்கும் ஞானவான்கள் பெருகுவர் அப்பா
6. அப்பனே இந்தவித அற்புதத்தை
அரங்கனை கொண்டே ஆறுமுகன் நடத்திவர
ஒப்புகொண்டு உலகோர் சரணடைந்து
ஓங்காரக்குடில் நோக்கி உலகோர் தொடர்ந்துவர
7. வருகவே வரங்கள் உறுதியாகும்
வஜ்ரம்போல் மனபலம் ஞான பலமாகி
அரங்கனே கலியின் சிறந்த குரு என
அனைவரும் வசமாகி இந்த கலியுகத்தில்
8. கலியுகத்தில் அரங்கனால் ஞானிகள் ஆவர்
கண்டதொரு இந்தவித மாற்றங்கள் நிகழவே
அழிவில்லா பாதுகாப்பை உலகம் காணும்
ஆபத்தில்லா ஞானவாழ்வை மக்களும் கண்டு
9. கண்டுமே ஞானவான்களை தேர்வு செய்து
கந்தவேலன் தலைமை ஏற்று நன்கு
உண்டாகும் உலகமெங்கும் ஞான ஆட்சி
உலகே வியக்க பாரதம் தொட்டு

10. தொட்டுமே இந்த மாற்றம் நிகழும்
தொடர்ந்து வரும் தேசிகன் தொண்டர்கள் மூலம்
கட்டமில்லா ஞான பூமியாகும்
கருணைமிக்க ஞானிகள் ஆட்சியுமாக

11. ஆகவே அற்புதம் எங்கும் நிறைந்து
அரங்க மகானின் அவதாரம் பூர்த்தியாகும்
வகைபட வணங்கிவர மாற்றம் உண்டு
வடிவேலா என முழங்கிவர தேற்றம் உண்டு
அருளாசி முற்றே

–சுபம்–